RNI No : TNTAM/2023/86867 www.deltamalar.com 95667 16060

# டெல்டா மலர்

## DELTA MALAR

www.deltamalar.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் - 4 | இதழ் - 101 | 16-22 ஏப்ரல் 2026 | பக்கம் - 8 | விலை ரூ.5 | தஞ்சாவூர் |
| VOL - 4 | ISSUE - 101 | 16-22 APRIL 2026 | PAGE - 8 | PRICE ரூ.5 | THANJAVUR |


# சட்டமன்ற தேர்தல் 2026






உதயசூரியன் மகுடம் சூடுமா!

இரட்டை இலைக்கு வழிவிட்டு ஒதுங்குமா?






மக்களின் தீர்ப்பு என்ன?

## வெற்றி யாருக்கு?

தமிழக அரசியலில் எப்போதும் முக்கிய இடம் பெறும் டெல்டா மண்டலத்தின் மையமாக திகழும் தஞ்சாவூர் மாவட்டம், 2026 தேர்தலிலும் அரசியல் களத்தின் மையமாக மாறியுள்ளது. ஆளுங்கட்சியின் நலத்திட்டங்கள் தொடருமா? எதிர்க்கட்சியின் வியூகங்கள் பலிக்குமா? புதிய முகங்கள் அதிர்ச்சி தருமா? மக்களின் தற்போதைய மனநிலை, உள்ளூர் அரசியல் சூழல், கட்சிகளின் அமைப்பு வலிமை, தரைமட்ட பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தொகுதிவாரியாக செய்யப்பட்ட அரசியல் மதிப்பீட்டின் முக்கிய அம்சங்கள் என்ன?

திமுக கோட்டைகள் மீண்டும் உறுதியாகுமா?

அதிமுக பழைய வாக்கு வங்கியை மீட்டெடுக்கப்படுமா?

இளைஞர் வாக்குகள் யாரை நோக்கி திரளும்?

பெண்கள் வாக்குகள் எந்த அணிக்கு சாதகமாகும்?

நகர்ப்புறம் vs கிராமப்புறம் – யாருக்கு பலம்?

போன்ற தகவல்கள் தொடர்ச்சியாக **டெல்டா மலரில்** வெளியாகிறது.







# தமிழக தேர்தலில் மகளிர் இட ஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை

## மாற்றத்தை ஏற்படுத்துமா?



நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தில் மத்திய அரசு கொண்டு வந்த பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை தொடர்பான அரசியலமைப்பு திருத்த மசோதா தோல்வியடைந்தது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அது பெரும் விவாதப் பொருளாக உருவெடுத்துள்ளன.

மத்திய அரசின் மசோதாக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்த கட்சிகளில் திமுக முக்கியமான பங்கு வகித்தது. அதே வேளையில் இந்த மசோதாக்களை வரவேற்றிருந்த அதிமுக, நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாமல் தோல்வியடைந்த பிறகு திமுகவை கடுமையாக விமர்சித்திருந்தது.

மசோதா தோல்வியடைந்ததுமே தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் அது பேசுபொருளாகிவிட்டது. மறுநாளே தமிழக தேர்தல் பிரசார கூட்டங்களில் மோதி, ராகுல்காந்தி, ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் அது தொடர்பாக எதிரணியைக் குறிப்பிட்டு விமர்சித்துள்ளனர். என்ன நடக்கிறது?

### நாடாளுமன்றத்தில் நடந்தது என்ன?

மகளிர் இட ஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை தொடர்பான 131-ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா வெள்ளிக்கிழமை மக்களவையில் தோல்வியடைந்தது.

மோதி அரசு கொண்டு வந்த அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா ஒன்று, கடந்த 12 ஆண்டுகளில் தோல்வியடைவது இதுவே முதல் முறையாகும்.

இந்த மசோதா விஷயத்தில் திமுக - அதிமுக இடையே நிலவும் முரண்பாடு தேர்தல் பிரசாரத்திலும் எதிரொலிக்கிறது. நாடாளுமன்றத்தில் மசோதா தோல்வியடைந்த மறுநாளே இரு தரப்பும் தேர்தல் களத்தில் அதனை முன்னிறுத்தி எதிரணியை சாடுகின்றன.

### அதிமுக - பாஜக கூட்டணி கூறுவது என்ன?

கோவையில் 18-ம் தேதி அன்று தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "திமுக, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் இந்த மசோதா நிறைவேறாமல் தடுத்து விட்டனர். எளிய குடும்பங்களில் இருந்து பெண்கள் நாடாளுமன்றத்திற்கும் சட்டப்பேரவைக்கும் வந்திருப்பார்கள். தமிழ்நாட்டிற்கும் கூடுதல் இடங்கள் கிடைத்திருக்கும்." என்றார்.

"ஆனால் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் அதனை விரும்பவில்லை. பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி பெண்களின் உரிமைக்காக தொடர்ந்து போராடும். திமுகவிற்கு காட்டுவதற்கும் எந்த சாதனையும் இல்லை, குற்றம் சொல்ல எந்த உண்மையான பிரச்னையும் இல்லை."

தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பதிவில், "தமிழ்நாடு தனது அரசியல் அதிகாரம் மற்றும் 20 எம்பி இடங்கள் என்கிற உரித்தான பங்கை அதிகரிக்கும் வாய்ப்பை தவறவிட்டுவிட்டது. 50% கூடுதல் இடங்கள் பெறுவதற்கு பிரதமர் மோதி வழங்கிய பொன்னான வாய்ப்பை நாம் தவறவிட்டது மட்டுமில்லை. மு.க.ஸ்டாலின் இந்த வாய்ப்பின்

அடிப்படையை புரிந்துகொள்ளாமல் கண்மூடித்தனமாக எதிர்த்துள்ளார்." எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டிருந்தால் நாம் 9 இடங்களை இழந்திருப்போம். தங்களின் அர்த்தமற்ற எதிர்ப்பால் தற்போது 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை நடைபெறும், நாம் மேலும் இடங்களை இழப்போம்." என்றும் கூறியிருந்தார்.

இதேபோல், தமிழகம் வந்த பாஜகவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், அதன் தமிழக தலைவர்கள் தமிழிசை சௌந்தரராஜன் மற்றும் அன்புமணி உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினரும் இதே குரலில் தேர்தல் பிரசார கூட்டங்களில் ஒலிக்கின்றனர்.

அதேநேரத்தில், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட வேண்டும் என்ற முயற்சி முறியடிக்கப்பட்டதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நேற்று (18-04-2026) பரப்புரையில் ஈடுபட்டார். அப்போது பேசிய ராகுல் காந்தி, "நான் தமிழ்நாட்டில் பிறக்காவிட்டாலும் என் குடும்பம் தமிழ்நாட்டிலிருந்து வராவிட்டாலும் என் உணர்வு தமிழ் மண்ணுடன் ஒன்றியிருக்கிறது. தொகுதி மறுவரையறை மசோதா மூலமாக தமிழ்நாட்டில் நாடாளுமன்றத்தின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் எண்ணமாக இருந்தது. ஆனால், அதை நாம் நேற்று தோற்கடித்து விட்டோம்." என்றார்.

தமிழக முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பதிவில் "இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீட்டுச் சட்டம், 2023"-ஐ மக்கள்தொகைக் கணக்கெடுப்பும், தொகுதி மறுவரையறையுமின்றி நிறைவேற்ற முடியாது என்பதை உறுதிசெய்யவே, மாநிலங்களில் தேர்தல் நடைபெறும் நேரத்தில் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டினார்கள். குறைந்தபட்சம், தொகுதி மறுவரையறை மசோதாவையும் மகளிர் இடஒதுக்கீட்டையும் பிரித்திருக்கலாம். ஆனால், பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு அதனைச் செய்யவில்லை," என தெரிவித்திருந்தார்.

அதிமுகவின் குற்றச்சாட்டுகளை மறுக்கும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் சல்மா, அதிமுக வரலாற்றுப் பிழை செய்திருப்பதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் பேசிய அவர், "மகளிர் இடஒதுக்கீடு மசோதா 2023-ஆம் ஆண்டே நிறைவேற்றப்பட்டு அமலுக்கும் வந்துள்ளது. அதனை தொகுதி மறுவரையறை உடன் இணைக்க வேண்டிய தேவை ஏன் இங்கு வந்தது என்பது தான் கேள்வி. பாஜக முன்வைக்கும் மசோதா தமிழ்நாட்டிற்கு தீங்கானது என்பதை உணராமல் திமுகவை எதிர்க்க வேண்டும் என்கிற ஒரே காரணத்துக்காக இந்த மசோதாவை எடப்பாடி பழனிசாமி ஆதரிக்கிறார்." என்றார்.

மகளிர் இடஒதுக்கீட்டிற்கு தொகுதி மறுவரையறை முடிகின்ற வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனக் கூறும் அவர், "தற்போது இருக்கின்ற இடங்களிலே மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த கோருகிறோம். பாஜக அதற்கு தயாராக உள்ளதா? அதிமுக அதற்கு குரல் எழுப்பத் தயாரா? தமிழ்நாட்டு மக்கள் இதனை தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாநில நலனுக்கு எதிராக உள்ளவர்களுக்கு 23-ஆம் தேதி வாக்குப்பதிவின் போது மக்கள் பதிலளிப்பார்கள்." என்றும் தெரிவித்தார்.

அதிமுகவின் செய்தி தொடர்பாளர் சசி ரேகாவோ, திமுக பெயரளவில் தான் சமூக நீதியைப் பேசுவதாக கூறுகிறார் . தொடர்ந்து பேசிய அவர், "தமிழ்நாட்டின் விகிதாச்சார பிரதிநிதித்துவம் பாதிக்கப்படக்கூடாது என முதலில் கூறியது அவர்கள் தான். தற்போது அதையே எதிர்க்கிறார்கள். மகளிரின் நலனில் திமுகவிற்கு அக்கறை இல்லை. திமுக கட்சியிலுமே மகளிருக்கு முக்கியத்துவம் தருவதில்லை. இந்த மசோதா நிறைவேறியிருந்தால் தமிழ்நாட்டிற்கு கூடுதல் இடங்கள் மட்டுமல்லாமல், மகளிருக்கும் இடஒதுக்கீட்டின் கீழ் கூடுதல் இடங்கள் கிடைத்திருக்கும். இது மாநிலத்திற்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும். திமுக சுய நல தேர்தல் நோக்கங்களுக்காக அதை கிடைக்காமல் செய்துவிட்டது." என்றார்.

திமுகவின் முடிவை பிற்போக்கான நகர்வு எனக் குறிப்பிட்ட அவர், "திமுக தவறான பரப்புரை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் மகளிர் உரிமைகளை அதிமுக விட்டுக்கொடுக்காது. திமுக மகளிரின் எதிர்ப்பைச் சந்திக்கும். இந்த மசோதா நிறைவேறியிருந்தால் பின்னாளில் அதனை 50% ஆக உயர்த்துவதற்கும் குரல் எழுப்பியிருக்கலாம். மகளிருக்கு இடம் கிடைக்கக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்துவிட்டார்கள்." என்றார்.

இது குறித்து பேசிய மூத்த பத்திரிகையாளர் விஜய் திரிவேதி, "இந்த மசோதா நிறைவேற்றப்படவில்லை; எனவே, தமிழ்நாட்டில் இது ஒரு பெரிய பிரச்னையாக உருவெடுக்கும் என்று நான் கருதவில்லை. ஏனெனில், அங்குள்ள முக்கியப் பிரச்னை தொகுதி மறுவரையறை (de-limitation) சார்ந்ததாகவே இருந்தது." என்றார்.

மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா நிறைவேறாததால் பாஜக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்குப் பின்னடைவு ஏற்படலாம் என்கிறார் அரசியல் விமர்சகர் ரவீந்திரன் துரைசாமி. "பெண்கள் வாக்கு வங்கி என்பதைவிட சிறுபான்மை வாக்கு வங்கி தான் அரசியல் கட்சிகளின் முடிவில் அதிகம் தாக்கம் செலுத்தியுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

"பாஜக இந்த மசோதாவைக் கொண்டு வந்தபோது, தங்களுக்கான சிறுபான்மை வாக்கு வங்கி பாதிக்கப்படும் என நினைத்த அகிலேஷ் மற்றும் தேஜஸ்வி போன்றோர் இதற்கு எதிராக வாக்களித்தனர். இது சில வழிகளில் பின்னடைவு என்றாலும் சிறுபான்மை வாக்கு வங்கியை ஒருங்கிணைக்க உதவும் என்பதால் அவர்கள் எதிர்த்து வாக்களித்தனர்." என்றார்.





கும்பகோணம் தொகுதியின்
புதிய மாற்றத்திற்கான முகவரி... எளியவர்களின்
நம்பிக்கையாக உருவெடுத்துள்ள மக்கள் சேவகன்

# ம.க.ஸ்டாலின்

**"பதவிகள் தேடி வருவதற்கு முன்பே மக்களைத் தேடிச் சென்று அவர்களின் குறைகளைத் தீர்ப்பவர். கும்பகோணம் மண்ணின் ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு இதயத்திலும் தடம் பதித்த உழைப்பின் அடையாளம் ம.க.ஸ்டாலின்!"**

**● மண்ணின் மைந்தன் – எளிமையும் வலிமையும்**

கும்பகோணம் தொகுதியில் ம.க.ஸ்டாலின் பெயர் இன்று ஒரு தனித்துவமான நம்பிக்கையை பெற்றுள்ளது. ஒரு சாதாரண தொண்டனாக தன் பயணத்தை தொடங்கி, இன்று தொகுதி மக்களின் குரலாக சட்டமன்றம் நோக்கி நடைபோடும் இவரது வளர்ச்சி, வெறும் அரசியல் நகர்வு அல்ல; அது உண்மையான உழைப்பிற்கு தரும் அங்கீகாரம்.

**● நேரடி மக்கள் தொடர்பு:**

குளிரூட்டப்பட்ட அறைகளில் அமராமல், வெயிலிலும் மழையிலும் மக்களுடன் நின்றே இவர் பழகுகிறார்.

**● உடனடி நடவடிக்கை:**

ஒரு கோரிக்கையை முன்வைத்தால், அது தீர்க்கப்படும் வரை ஓயாமல் உழைக்கும் இவரது குணம், தொகுதி மக்களிடையே பெரும் மதிப்பை பெற்று தந்துள்ளது.

**● எளிமையின் சின்னம்:**

எந்த நேரத்திலும் எந்த ஒரு சாமானிய மனிதனும் இவரைத் தொடர்பு கொள்ளலாம் என்ற நிலை இருப்பதால், இவரை ஒரு 'மக்கள் பிரதிநிதி'யாகவே அனைவரும் பார்க்கின்றனர்.

**● ஒரு வார காலக் களப்பணிகள்;**

கடந்த ஒரு வாரத்தில் கும்பகோணம் தொகுதியில் ம.க.ஸ்டாலின் மேற்கொண்ட அதிரடிப் பயணங்கள், அந்த தொகுதியின் அரசியல் சூழலையே மாற்றியுள்ளன.

**● விவசாயிகளின் தோழன்:**

டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளை நேரடியாகக் கேட்டறிந்து, அவற்றுக்கான தீர்வுகளை அரசு மட்டத்தில் கொண்டு செல்ல உறுதி அளித்துள்ளார்.

கும்பகோணம் தொகுதியில் ம.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட அதிரடிப் பயணங்கள், அந்தத் தொகுதியின் அரசியல் சூழலையே மாற்றியுள்ளன.



**● கிராமப்புறச் சந்திப்புகள்:**

தொகுதியின் உட்புறக் கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள அடிப்படைத் தேவைகளான குடிநீர் மற்றும் சாலை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

**● வாக்கு சேகரிப்பு:**

"நம் தொகுதி, நம் வளர்ச்சி" என்ற முழக்கத்துடன் வீதி வீதியாகச் சென்று இவர் சேகரித்த ஒவ்வொரு வாக்கும், மாற்றத்திற்கான ஒரு துளியாகப் பார்க்கப்படுகிறது.

**● ஏன் கும்பகோணம் இவரை விரும்புகிறது?**

கும்பகோணத்தின் எதிர்கால வளர்ச்சியை முன்னிறுத்தி இவர் வைத்துள்ள திட்டங்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

**● கல்வி மற்றும் வேலைவாய்ப்பு:**

உள்ளூர் இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்களை ஒருங்கிணைப்பதில் இவர் காட்டும் ஆர்வம் குறிப்பிடத்தக்கது.

ஆன்மிக தலங்களின் மேம்பாடு: கும்பகோணத்தின் பாரம்பரியத்தை பாதுகாப்பதோடு, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த இவர் முன்வைத்துள்ள திட்டங்கள் பாராட்டுக்குரியவை.

சுகாதார விழிப்புணர்வு:

கிராமப்புற மக்களுக்கு முறையான மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய இவர் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பல உயிர்களைக் காக்க உதவுகின்றன.

2026 சட்டமன்றத் தேர்தலில் கும்பகோணம் தொகுதியின் வெற்றி முகமாக ம.க.ஸ்டாலின் உருவெடுத்துள்ளார்.

**● மக்களின் ஆதரவு:**

கருத்துக்கணிப்புகள் மற்றும் கள நிலவரப்படி, இவருக்கு இருக்கும் மக்கள் செல்வாக்கு முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது.

**● நேர்மையான அரசியல்:**

கறைபடியாத கைகளுடன், நேர்மையான பாதையில் இவர் முன்னெடுக்கும் அரசியல், நடுநிலை வாக்காளர்களை இவர் பக்கம் ஈர்க்கச் செய்கிறது.

**● ஒரு நவீன மாற்றத்தின் தொடக்கம்**

கும்பகோணம் தொகுதியின் மிக முக்கியமான பகுதியான ஆடுதுறை பேரூராட்சிப் பகுதிகளில் நிலவி வந்த நீண்ட காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் திரு. ம. க. ஸ்டாலின் அவர்கள் தனி கவனம் செலுத்தி வருகிறார்.

**● ஆடுதுறை: ஒரு நவீன மாற்றத்தின் தொடக்கம்**

கும்பகோணம் தொகுதியின் மிக முக்கியமான பகுதியான ஆடுதுறை பேரூராட்சி பகுதிகளில் நிலவி வந்த நீண்ட காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ம.க.ஸ்டாலின் தனி கவனம் செலுத்தி வருகிறார்.

**● உள்கட்டமைப்பு மேம்பாடு:**

ஆடுதுறை பகுதிகளில் சேதமடைந்த சாலைகளைப் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கவும், புதிய தார்ச் சாலைகள் அமைக்கவும் இவர் எடுத்த முயற்சிகள் போக்குவரத்து வசதியை எளிதாக்கியுள்ளன.

**● பாதுகாக்கப்பட்ட குடிநீர்:**

ஆடுதுறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யப் புதிய குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

**● சுகாதார விழிப்புணர்வு:**

ஆடுதுறை பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை நவீனப்படுத்தவும், 24 மணிநேரமும் தரமான சிகிச்சை கிடைக்கவும் இவர் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

**● விவசாயிகளின் விடிவெள்ளி**

டெல்டா மண்டலத்தின் இதயமாக விளங்கும் ஆடுதுறை மற்றும் கும்பகோணம் பகுதிகளில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதையே தனது முதன்மை லட்சியமாகக் கொண்டுள்ளார். வாய்க்கால் தூர்வாருதல்: சாகுபடி காலத்திற்கு முன்னரே பாசன வாய்க்கால்களைத் தூர்வாரி, கடைமடைப் பகுதியான ஆடுதுறை வரை காவிரி நீர் தடையின்றிச் செல்வதை நேரில் சென்று ஆய்வு செய்துள்ளார். நேரடித் தொடர்பு: விவசாயிகளுடன் வரப்பில் அமர்ந்து பேசி, அவர்களின் உரம் மற்றும் இடுபொருள் தட்டுப்பாடுகளைத் தீர்க்கத் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்துகிறார்.

**● இளைஞர்களின் எழுச்சி மற்றும் வேலைவாய்ப்பு**

கும்பகோணம் தொகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு உள்ளூரிலேயே வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்: இளைஞர்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கத் தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து சிறப்பு முகாம்களை ஒருங்கிணைத்து வருகிறார்.

**● தொழில்முனைவோர் வழிகாட்டல்:**

சிறுதொழில் தொடங்க விரும்பும் இளைஞர்களுக்கு வங்கிக் கடன் மற்றும் அரசுச் சலுகைகளைப் பெற்றுத் தருவதில் ஒரு பாலமாகச் செயல்படுகிறார்.

நிர்வாகத்தின் முதிர்ச்சி... மக்களின் மீதான பற்று... கும்பகோணத்தின் மாற்றத்திற்கான விசை!

ம.க.ஸ்டாலின் கும்பகோணம் தொகுதியின் புதிய நம்பிக்கை!

## உறுதிமொழி:

**"கும்பகோணத்தின் ஒவ்வொரு வளர்ச்சியும் என் லட்சியம்" என இவர் அளிக்கும் வாக்குறுதி, தொகுதி மக்களின் கனவுகளை நனவாக்கும் ஒரு சக்தியாக உள்ளது.**

**நிர்வாகத்தின் முதிர்ச்சி... மக்களின் மீதான பற்று... கும்பகோணத்தின் மாற்றத்திற்கான விசை!**

# மக்களின் ஒருவனாக... தொகுதியின் அரணாக...

## பாபநாசத்தை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தும்

## துரை.சண்முக பிரபு



"அரசியல் என்பது அதிகாரம் அல்ல; அது எளிய மனிதர்களின் கண்ணீர் துடைக்கும் ஒரு அரிய வாய்ப்பு" என்பதைத் தனது ஒவ்வொரு மூச்சிலும் நிரூபித்து வருபவர் திரு. துரை. சண்முக பிரபு. வெறும் தேர்தல் காலத்து அரசியல்வாதியாக இல்லாமல், தொகுதி மக்களின் சுகதுக்கங்களில் ஒரு பங்காளியாக நின்று, இன்று பாபநாசம் தொகுதியின் அசைக்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளார்.

**● மக்களின் ஒருவனாக... எளிமையின் சிகரம்**

ஒரு தலைவன் என்பவன் வானத்தில் இருந்து குதித்தவன் அல்ல; அவன் மக்களோடு மக்களாக வளர்ந்தவன். துரை. சண்முக பிரபு பலமே அவரது எளிமைதான்.

**● இன்முகமான வரவேற்பு:**

தன்னிடம் வரும் எந்த ஒரு சாமானிய மனிதனையும் இன்முகத்தோடு வரவேற்பது, அவர்களின் குறைகளைத் தீர்க்கத் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டுவது ஆகியவை அவரை ஒரு "மக்கள் தலைவராக" மாற்றியுள்ளன.

**● உழைப்பால் உயர்ந்தவர்:**

ஒரு சாதாரணத் தொண்டனாகத் தன் அரசியல் வாழ்வைத் தொடங்கி, இன்று ஒரு பெரும் மக்கள் திரளின் நம்பிக்கையாக உயர்ந்திருப்பதற்குப் பின்னால் இருப்பது இவரது அசைக்க முடியாத உழைப்பு மட்டுமே.

**● திறந்த கதவுகள்:**

இவரது இல்லமும் சரி, அலுவலகமும் சரி, எந்த நேரத்திலும் பாபநாசம் தொகுதியின் அடித்தட்டு மக்களுக்காகத் திறந்தே இருக்கும்.

**● வீட்டுப் பிள்ளை:**

"என் மக்கள் என்னை எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம்" என்ற இவரது திறந்த மனப்பான்மை, இவரை ஒரு அதிகாரமிக்க தலைவராகக் காட்டாமல், ஒரு வீட்டுப் பிள்ளையாகக் காட்டுகிறது.

**● வளர்ச்சியை நோக்கிய தொலைநோக்குப் பார்வை:**

பாபநாசம் தொகுதியின் வளர்ச்சி என்பது வெறும் காகிதங்களில் மட்டும் இருக்கக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

**● விவசாயிகளின் விடிவெள்ளி:**

டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதிலும், அவர்களுக்குத் தேவையான நீர் மேலாண்மை மற்றும் இடுபொருள்ககள் தடையின்றி கிடைப்பதிலும் இவர் காட்டும் முனைப்பு ஈடு இணையற்றது.

கல்விப் புரட்சி: ஏழை மாணவர்களின் உயர் கல்விக்குத் தோள் கொடுப்பது இவரது முதன்மை லட்சியமாகும்.

தரமான சுகாதாரம்: கிராமப்புறங்களில் தரமான மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதில் இவர் சமரசமற்ற ஆர்வம் காட்டுகிறார்.

**● அடிப்படை கட்டமைப்பு:**

சாலைகள், குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் தொகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுகிறார்.

**● இளைஞர்களின் நம்பிக்கை மற்றும் பெண்களின் அரண்:**

இளைஞர்களின் துடிப்பையும், பெண்களின் பொருளாதாரத் தற்சார்பையும் இவர் தனது அரசியல் பயணத்தின் இரு கண்களாகக் கருதுகிறார்.

**● திறன் மேம்பாடு:**

இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கி, அவர்களைத் தொழில்முனைவோர்களாக மாற்றுவதில் பெரும் ஆர்வம் காட்டுகிறார்.

பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம்: மகளிர் சுய உதவிக்குழுக்களை வலுப்படுத்துதல் மற்றும் பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், "வீட்டின் விடியல் நாட்டின் விடியல்" என்பதை மெய்ப்பித்து வருகிறார்.

**● புதிய தலைமுறைக்கு வழிகாட்டி:**

நவீன கால இளைஞர்களின் கனவுகளுக்குச் செவிசாய்த்து, அவர்களுக்குச் சரியான அரசியல் மற்றும் சமூக வழிகாட்டுதலை வழங்கி வருகிறார்.

**● களத்தில் நின்ற களவீரன் (பேரிடர் கால நாயகன்)**

இயற்கைச் சீற்றங்கள் அல்லது எதிர்பாராத விபத்துகள் எதுவாக இருந்தாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் ஆளாக உதவிக்கரம் நீட்டுபவர் துரை. சண்முக பிரபு.

**● நேரடி ஈடுபாடு:**

இவரது களப்பணிகள் அதிகாரிகளுடனான ஒருங்கிணைப்போடு மட்டும் நின்றுவிடாமல், நேரடியாகத் தானும் களத்தில் இறங்கி பணியாற்றுவது மக்களுக்கு இவர் மீதுள்ள நம்பிக்கையை இரட்டிப்பாக்கியுள்ளது.

**● சோர்வறியா சேவை:**

மழையென்றும், வெயிலென்றும் பாராமல் மக்களின் துயர் துடைக்கக் களத்தில் நிற்கும் இவரது வேகம், தொண்டர்களுக்கும் மக்களுக்கும் ஒரு புதிய உத்வேகத்தைத் தருகிறது.

நிர்வாகத் திறன்: திட்டங்களைச் சரியாகச் செயல்படுத்தும் வேகம், நேர்மை: கறைபடியாத, நேர்மையான அரசியல் பயணம். 24/7 தொடர்பு: 24 மணிநேரமும் மக்களுடன் எளிமையாகத் தொடர்பில் இருக்கும் பண்பு.


2026-ன் வெற்றி வேட்பாளர்: சண்முக பிரபு

டெல்டா மலர் நடத்திய கள ஆய்வுகள் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்புகளின்படி, பாபநாசம் தொகுதியில் துரை. சண்முக பிரபு அவர்களின் வெற்றி வாய்ப்பு என்பது உறுதிசெய்யப்பட்ட ஒன்றாகவே (Confirmed Winner) பார்க்கப்படுகிறது.

# மாமன்றம் முதல் சட்டமன்றம் வரை...

**சாதனைகள் சொல்லும் பெயர்...**
**தஞ்சை மக்கள் மனம் கவர்ந்த தலைவர்**

# சண். இராமநாதன்



**திராவிட மாடல் அரசில் தஞ்சை மாநகராட்சியில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வளர்ச்சி முகமாக உருவெடுத்த சண். இராமநாதன் 2026 சட்டமன்ற தேர்தலில் தஞ்சாவூர் தொகுதியின் வலுவான வெற்றி முகமாக பேசப்படுகிறார்.**

தஞ்சாவூர் என்றாலே பாரம்பரியம், பண்பாடு, விவசாயம், கல்வி, கலாச்சாரம் என பல பெருமைகளை தாங்கிய மண். அந்த மண்ணை மேலும் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் நிர்வாக முகமாக சண். இராமநாதன் திகழ்கிறார்.

தஞ்சை மாநகராட்சியில் மேயராக பணியாற்றியபோது பல்வேறு முன்னேற்ற திட்டங்களை செயல்படுத்தியவர் என மக்கள் பாராட்டுகின்றனர்.

மக்களோடு நேரடியாக இணையும் எளிமை, நிர்வாகத்தில் தெளிவு, திட்டங்களில் வேகம், செயலில் நேர்மை ஆகியவை அவரை தனித்த தலைவராக மாற்றியுள்ளன.

**● விவசாயத்திற்காக செயல்பட்ட நிர்வாகம்**

தஞ்சை மண் விவசாயத்தின் இதயம். அதனை உணர்ந்து, உழவர்களுக்கு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்தவர் சண். இராமநாதன்.

**● முக்கிய சாதனைகள்:**

சாந்திவனம் பகுதியில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைப்பு.

காமராஜர் மார்க்கெட்டில் காய்கறி கழிவுகளில் இருந்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம்.

டெல்டா விவசாயிகள் பயன்பெற மாநகராட்சி திடலில் விவசாயக் கண்காட்சி.

இயற்கை விவசாய விழிப்புணர்வு முகாம்கள்.

**● மக்கள் பாராட்டு:**

“விவசாயத்தின் தேவையை புரிந்த மேயர்” என்ற பெயரை பெற்றுள்ளார்.

**● கல்விக்காக களம் இறங்கிய தலைவர்;**

ஒரு நகரத்தின் எதிர்காலம் கல்வியில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து, மாணவர்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.

மாநகராட்சி பள்ளிகளில் காலை உணவுத் திட்டம்.

சின்னக்கடைத் தெரு மாநகராட்சி பள்ளிக்கு ரூ.40 லட்சம் செலவில் நவீன வகுப்பறைகள்.

ரூ.2.50 கோடி செலவில் சரபோஜி மன்னர் கல்லூரியில் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம். “அனைவரும் இணைவோம் அறிவியல் அறிவோம்” திட்டத்தின் கீழ் கல்வி கண்காட்சி.

வெற்றி பெற்ற 47 மாணவர்கள் இஸ்ரோ பயணம்.

**● இளைஞர்களின் நம்பிக்கை:**

மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளார்.

**● தூய்மை தஞ்சை... பசுமை தஞ்சை...**

நகர வளர்ச்சியின் அடிப்படை தூய்மையும் சுற்றுச்சூழலும் என்பதை உணர்ந்து பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.

**● சுற்றுச்சூழல் சாதனைகள்:**

மக்கும் குப்பையில் இருந்து உரம் தயாரித்து விற்பனை செய்யும் திட்டம்.

அதன் வருவாயை தூய்மைப் பணியாளர்கள் பயன்படுத்தும் நடைமுறை.

சாலையோர மண்ணை அகற்ற ரூ.60 லட்சம் மதிப்பில் நவீன வாகனம்.

கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்தில் 3 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரம் தயாரிப்பு.

கல்லணை கால்வாய் கரையோரத்தில் 3 டன் குப்பைகள் அகற்றம்.

“சுத்தமான நகரம்... சிறந்த நிர்வாகம்...”

மருத்துவத்தில் மனிதநேயம்;

மக்கள் ஆரோக்கியமே முதன்மை என்ற எண்ணத்தில் சுகாதாரத் துறையிலும் பல முன்னேற்றங்கள் நடந்துள்ளன.

சுகாதார சாதனைகள்:

கல்லுக்குளம் ஆரம்ப சுகாதார மையம் 3-வது முறையாக சிறந்த மையமாக தேர்வு.

1274 கர்ப்பிணிகளுக்கு பாதுகாப்பான பிரசவம்.

100% வெற்றியை பெற்ற மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் கவுரவிப்பு.

மக்கள் மனதில் இடம்:

“சேவை செய்யும் தலைவர்” என்ற நம்பிக்கை மக்கள் மனதில் உருவாகியுள்ளது.

**● 2026 தேர்தலில் தஞ்சையின் தீர்ப்பு யாருக்கு?**

மக்கள் சேவை, நிர்வாக அனுபவம், நகர வளர்ச்சி, விவசாய அக்கறை, கல்வி முன்னேற்றம், தூய்மை முயற்சி, சுகாதார சாதனைகள் என பல துறைகளில் தடம் பதித்த சண். இராமநாதன் தஞ்சாவூர் தொகுதியின் வலுவான முன்னணி வேட்பாளராக, வெற்றி வேட்பாளராக பேசப்படுகிறார்.

**● மக்கள் மத்தியில் ஒலிக்கும் முழக்கம்:**

தஞ்சை செழிக்க சண். இராமநாதன்
மக்களோடு இணைந்த நடை...
மனங்களில் பதிந்த தலைவர்!

அரசியலில் வெற்றி பெற பலர் வரலாம். ஆனால் மக்கள் மனதில் இடம் பெற சிலரால் மட்டுமே முடியும். அந்த வகையில் தஞ்சாவூரில் எளிமை, அணுகும் தன்மை, உடனடி நடவடிக்கை ஆகியவற்றால் தனி அடையாளம் உருவாக்கியவர் சண். இராமநாதன்.

பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களோடு தொடர்ந்து தொடர்பில் இருக்கும் தலைவர் என்ற பெயர் அவருக்கு உள்ளது.

**● மக்கள் கூறுவது:**

“எளிதில் சந்திக்க முடியும் தலைவர்”
“கேட்ட குறையை கவனிப்பவர்”
“அமைதியாக வேலை செய்பவர்”
“வாக்குறுதியை விட செயலில் நம்பிக்கை கொண்டவர்”

**● நேரடி மக்கள் தொடர்பு**

வார்டு வாரியாக மக்கள் சந்திப்பு, பொதுமக்கள் குறைதீர் மனுக்கள், திடீர் ஆய்வுகள், தள பார்வைகள் போன்ற முறைகளில் நேரடியாக செயல்பட்டவர்.

**● இளைஞர்களின் நம்பிக்கை... பெண்களின் ஆதரவு... குடும்பங்களின் தேர்வு!**

ஒரு தேர்தலில் இளைஞர்கள், பெண்கள், முதல் முறை வாக்களிப்போர் ஆகியோரின் ஆதரவு முக்கியம். அந்த வகையில் சண். இராமநாதனுக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதாக சொல்லப்படுகிறது.

மாமன்றத்தில் தொடங்கிய இவரது மக்கள் பணி சட்டமன்றத்துலும் ஜொலிக்க இருக்கிறது.

**● கருத்துக்கணிப்பு என்ன சொல்கிறது?**

டெல்டா மலர் நடத்திய கருத்துக்கணிப்பில் தஞ்சாவூர் தொகுதியில் வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளராக சண்.இராமநாதன் இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.




# தொகுதி மறுவரையறையை எதிர்க்கவில்லை, நியாயமான நடைமுறையையே வலியுறுத்தினோம்'

**- முதலமைச்சர் ஸ்டாலின்**

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா போதிய வாக்குகள் பெறாமல் தோல்வியடைந்தது. இந் நிலையில் இந்த மசோதா தோல்வி தொடர்பாக பதிவிட் டுள்ள முதலமைச்சர் ஸ்டாலின்,

“தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராகத் தமிழ்நாடு போராடியது; தமிழ்நாடு வென்றது இந்திய ஜனநாயகத்தில் யாருக்கு பிரதிநிதித்துவும் இருக்கும், யாருடைய குரலுக்கு இடமிருக்கும் என்பதுதான் தொகுதி மறுவரையறை. அது ஒன்றியத்தைப் பலப்படுத்துவ தாக இருக்க வேண்டுமே ஒழிய, பலவீனப்படுத்துவதாக



இருக்கக் கூடாது!

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய பாதையில், தமிழ்நாடு எப்போது நீதி - கண்ணியம் - கூட்டாட்சி ஆகிய வற்றுக்காகவே நின்றுள்ளது.

தென்னிந்தியா ஒன்றி ணைந்தது; நமது குரல் கேட்கப்பட்டது; ஜனநாயகம் வென்றது! நாம் தொகுதி மறு வரையறையை எதிர்க்கவில்லை. நன்கு சிந்தித்து, அனைவரையும் கலந்தாலோசித்து, அனைவரும் ஏற்றுகொண்ட நியாயமான நடைமுறையையே நாம் வலியுறுத்தினோம்.

தமிழ்நாட்டின் உரிமை களுக்கும், நமது பண்பாடு மற்றும் அடையாளத்துக்கும், இந்திய கூட்டாட்சிக்கும் ஊறு வரும்போது, ஒற்றுமையுடன் நிற்பதுதான் நமது உறுதி!

இந்த அநீதியை எதிர்த்து ஓரணியில் நின்ற அனைத்துத் தோழமைக் கட்சிகளுக்கும் என்னுடைய நன்றி!” எனக் குறிப்பிட்டுள்ளார்.



டாஸ் வென்ற குஜராத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. முதலில் ஆடிய மும்பை அணி 199 ரன்கள் எடுத்தது. அடுத்து ஆடிய குஜராத் அணி 100 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

மும்பை அணிக்கு குயின்டன் டி காக், டேனிஷ் மாலேவார் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினர்.

ஆரம்பத்திலேயே மும்பை அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. 1.5 ஓவரில் டேனிஷ் மாலேவார் 2 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். மற்றொரு சரிவாக குயின்டன் டி காக் 13 ரன்களுக்கு அவுட் ஆனார்.

இதனால் அந்த அணி 25 ரன்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்தது. ஒரு பக்கம் நமன் திர் நிதானமாக ரன்களை குவிக்க, மற்றொரு பக்கம் சூர்யகுமார் யாதவ் 10 பந்துகளில் 15 ரன்களுக்கு ரபாடா பந்தில் போல்ட் ஆனார்.

நல்ல கூட்டணி கிடைக்காமல் தவித்த அணிக்கு நமன் திர், திலக் வர்மா சற்று ஆறுதல் அளித்தனர். இருவரும் சேர்ந்து 52 ரன்கள் எடுத்த நிலையில், நமன் திர் 45 ரன்களுக்கு அவுட் ஆனார். அடுத்து வந்த ஹர்திக் பாண்ட்யா, திலக் வர்மாவுக்கு பக்கபலமாக இருந்ததால் அணியின் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது.

இந்த கூட்டணியில் ஹர்திக் பாண்ட்யா அதிகம் ஆடாத நிலையில், பெரும்பாலான பந்துகளை திலக் வர்மா எதிர்கொண்டு பந்துகளை விளாசினார்.

இருவரும் சேர்ந்து 38 பந்துகளில் 81 ரன்கள் குவித்த நிலையில், அதில் ஹர்திக் பாண்ட்யா எடுத்தது வெறும் 15 ரன்கள் மட்டுமே.

ஹர்திக் பாண்ட்யா அவுட் ஆனபோதும் திலக் வர்மாவின் அதிரடி ஆட்டம் நிற்கவில்லை.

45 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 101 ரன்கள் குவித்த திலக் வர்மா, மும்பை அணி 20 ஓவர்களில் 199 ரன்கள் சேர்க்க உதவினார்.

‘திலக் வர்மா அதிரடி சதம்’ குஜராத்தை 99 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை வீழ்த்தியது எப்படி?பட மூலாதாரம்,

### குஜராத் ஆட்டம் எப்படி?

குஜராத் அணிக்கு சாய் சுதர்ஷன் மற்றும் ஜோஸ் பட்லர் களம் இறங்கினர். முதல் பந்திலேயே சாய் சுதர்ஷன் விக்கெட்டை வீழ்த்தி பும்ரா அசத்தினார்.

ஹர்திக் பாண்ட்யா வீசிய ஓவரில் ஜோஸ் பட்லர் 5 ரன்களுக்கு ஆட்டமிழக்க, குஜராத் அணி 2 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

அடுத்து வந்த சுப்மன் கில், வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் சற்று நிதானமாக ரன்களை சேர்த்த நிலையில், இந்த கூட்டணி அதிக நேரம் நீடிக்கவில்லை.

கில் 14 ரன்களிலும், வாஷிங்டன் சுந்தர் 26 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த கிளென் பிலிப்ஸ் 6 ரன்களுக்கு அவுட் ஆனதால், குஜராத் அணி நல்ல கூட்டணியின்றி திணறியது.

ராகுல் திவெட்டியாவும், ஷாருக் கானும் கூட்டணி அமைத்த நிலையில், அவர்கள் 24 ரன்கள் மட்டுமே சேர்த்தனர்.

ராகுல் திவெட்டியா 8 ரன்களுக்கு ஆட்டமிழக்க, ஷாருக் கான் 17 ரன்களுக்கு அவுட் ஆனார்.

இதனால் அந்த அணி 85 ரன்களில் 7 விக்கெட்டுகளை இழந்தது.

அதன் பிறகு வந்த ரஷித் கான், ரபாடா, சிராஜ் ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால், குஜராத் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 100 ரன்கள் மட்டுமே எடுத்தது.




# கும்பகோணம் அரசு இன்ஜினியரிங் கல்லூரியில் ஆண்டு விழா

கும்பகோணம் அரசு இன்ஜினியரிங் கல்லூரியில் ஆண்டு விழா நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அரசு இன்ஜினியரிங் கல்லூரியில் கடந்த வாரம் ஆண்டு விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் முனைவர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றி நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார்.

கல்லூரியின் நிறுவனத் தலைவர் திருநாவுக்கரசு, கல்லூரியின் தலைவர் செந்தில்குமார், கல்லூரியின் இயக்குனர் அரவிந்த் ஆகியோர் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று மாணவர்களுக்கான சிறப்புரை வழங்கினர்.

மேலும் அரசு மற்றும் தனியார் துறையில் உயர் பதவிகள் வகிக்கும் அரசு இன்ஜினியரிங் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சரவணன், அபிராகவி, சபரி லட்சுமி மற்றும் சிவசங்கரி ஆகியோரும் ஆண்டு விழாவின் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு தங்களுடைய கல்லூரி நினைவுகளையும், அனுபவங்களையும் மாணவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தனர்.

இவ்விழாவில் புலத்தலைவர்கள் முனைவர் ருக்மாங்கதன், முனைவர் சுந்தர செல்வன், தியாகராஜன் மற்றும் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆர்வமாக கலந்து கொண்டனர். நிறைவாக மாணவர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரியின் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகளும் சிறப்பாக செய்திருந்தனர்.



# சினி டாக்



## முதல் படத்தில் தங்கை... அடுத்து காதலி... நிஜத்தில் மனைவி...

## 5 வருடம் ரகசியமாக காதலித்த தமிழ் பட நடிகர் - நடிகை யார்?

இந்த நடிகர் முதல் படத்தில் நடிக்கும் போது அவரின் மனைவி 80 படங்களில் நடித்திருந்த லேடி சூப்பர் ஸ்டார் நடிகை. இந்த ஜோடி 12 திரைப்படங்கள் ஒன்றாக நடித்திருக்கின்றனர்.

தமிழில் 'முறை மாமன்', 'தெனாலி', 'பஞ்சதந்திரம்', 'துப்பாக்கி' போன்ற படங்கள் மூலம் இன்றும் நம் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் ஜெயராம். அண்மையில் 'தி கோட்', 'பொன்னியின் செல்வன்' ஆகிய படங்கள் மூலம் மீண்டும் தமிழ் சினிமாவில் நடிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார். தற்போது பாண்டியராஜ் இயக்கத்தில் ஊர்வசி ஜோடியாக ஜெயராம் தமிழில் நேரடி படத்தில் நடித்து வருகிறார்.

என்ன தான் மலையாள நடிகராக இருந்தாலும் ஜெயராமின் பூர்வீகம் கும்பகோணம் தான். அதேபோல் சென்னையில் தான் கடந்த 30 வருடங்களாக வசித்தும் வருகிறார். ஜெயராம் அவரது மனைவி பார்வதியை காதலித்து மணந்தார் என்பது பலருக்கும் தெரிந்ததே. ஆனால் அவர்களின் காதல் கதை பலருக்கும் தெரியாது. சினிமா உலகின் 'க்ளாசிக் ஜோடி' என்று வர்ணிக்கப்படும் ஜெயராம் – பார்வதி தம்பதியினரின் காதல் கதை, ஒரு அழகான சினிமா திரைக்கதை போன்றது.

1980–களின் இறுதியில் ஜெயராம் சினிமாவில் நுழையும்போது பார்வதி ஏற்கனவே ஒரு முன்னணி நடிகை. அப்போதே பார்வதி 80 படங்களில் நடித்திருந்த லேடி சூப்பர் ஸ்டார். மிகச்சிறந்த குணச்சித்திர நடிகையாகவும், கிளாமர் இல்லாத யதார்த்தமான நடிப்பிற்கும் பெயர் பெற்றவர் பார்வதி. இந்த நிலையில் தான் 1988–ல் பத்மராஜன் இயக்கத்தில் உருவான 'அபரன்' திரைப்படத்தில்தான் ஜெயராம் மற்றும் பார்வதி இருவரும் முதன்முதலில் இணைந்தனர். அதுவே ஜெயராமுக்கு முதல் படம். இந்தப் படத்தில் ஜெயராமும் பார்வதியும் சகோதர சகோதரிகள்.

அதே ஆண்டு வெளியான திரைப்படம் 'விட்னஸ்'. இதில் ஜெயராமின் காதலி பார்வதி. முதல் சந்திப்பிலேயே ஜெயராமுக்கு பார்வதி மீது ஒரு ஈர்ப்பு இருந்தது. பார்வதி அப்போது புகழின் உச்சியில் இருந்தார், ஆனால் ஜெயராம் ஒரு அறிமுக நடிகர். இருந்தபோதிலும், ஜெயராமின் நகைச்சுவை உணர்வும், மிமிக்ரி திறமையும் பார்வதியை வெகுவாகக் கவர்ந்தது. இதற்கிடையே, 'விட்னஸ்' படத்தின் செட்டில் வைத்து ஒருநாள் பார்வதியிடம் தனது காதலை சொல்லியிருக்கிறார் ஜெயராம். அதற்கு பார்வதியும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

சுவாரசியமான விஷயம் என்னவென்றால், இவர்கள் காதலித்த விஷயம் பல வருடங்களாக யாருக்கும் தெரியாமல் இருந்தது. படப்பிடிப்பு தளங்களில் கூட மிகவும் கண்ணியமாகவும், தொழில்முறை ரீதியாகவும் நடந்து கொள்வார்களாம். ஜெயராமும் பார்வதியும் தங்களது காதலை கடிதம் மற்றும் கேசட் மூலம் வளர்த்தனர். இடைப்பட்ட காலத்தில் தான் இவர்கள் இருவரும் 'சுபயாத்திரை', 'தலையணைமந்திரம்' என 12 படங்களில் ஜோடியாக நடித்தனர். திரையில் இவர்களது கெமிஸ்ட்ரி ரசிகர்களால் கொண்டாடப்பட்டது. நிஜ வாழ்க்கையிலும் இவர்களது நட்பு மெல்ல காதலாக மாறியது.

காதலிக்க ஆரம்பித்து 5 வருடங்கள் கடந்து இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தபோது தான் வெளியே தெரிந்திருக்கிறது. எல்லாக் காதல் கதைகளையும் போலவே இவர்களது காதலுக்கும் ஆரம்பத்தில் வீட்டில் எதிர்ப்பு இருந்தது. குறிப்பாக பார்வதி ஒரு முன்னணி நடிகையாக இருந்ததால், அவரது குடும்பத்தினர் யோசித்தனர். ஆனால் ஜெயராம் தனது உழைப்பால் ஒரு வெற்றி நாயகனாக உயர்ந்தார். இறுதியாக, 1992 செப்டம்பர் 7–ல் இவர்களது திருமணம் மிக விமரிசையாக நடந்தது. திருமணத்திற்குப் பிறகு ஜெயராம் மென்மையான குடும்ப நாயகனாக உருவெடுத்தார்.

மலையாளத்தில் மோகன்லால், மம்முட்டிக்கு இணையாக 'ஃபேமிலி ஆடியன்ஸ்' ரசிக்கும் நடிகராக மாறினார். தமிழ் உட்பட பிற மொழித் திரைப்படங்களிலும் ஜெயராம் நடிக்க தவறவில்லை. அதேநேரம், பார்வதி தனது சினிமா வாழ்க்கையை முழுமையாகத் துறந்து, குடும்பப் பொறுப்புகளைக் கவனித்துக் கொள்ள முடிவெடுத்தார். இது பல ரசிகர்களுக்கு வருத்தமாக இருந்தாலும், அவர் தனது குடும்பத்திற்காக எடுத்த உறுதியான முடிவாக அமைந்தது.

ஜெயராம் – பார்வதி தம்பதிக்கு காளிதாஸ் மற்றும் மாளவிகா என இரண்டு பிள்ளைகள் உள்ளனர். காளிதாஸ் தற்போது தென்னிந்திய சினிமாவில் வளர்ந்து வரும் ஒரு திறமையான நடிகர். மாளவிகாவுக்கும் சமீபத்தில் தான் திருமணம் முடிந்தது. சினிமா உலகில் அண்மைக்காலமாக பல திருமணங்கள் முறிந்து போகும் சூழலில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருவருக்கொருவர் துணையாக நின்று, இன்றும் ஜெயராமும் பார்வதியும் காதலுடன் வாழ்ந்து வருகின்றனர்









